

# ஊற்று



### தலைவர் உரை :

## பெங்களூர் மாநகராட்சித் தேர்தலில் தமிழர்கள்

பெங்களூர் மாநகராட்சித் தேர்தல் கடந்த ஆகசுடு 22 ஆம் நாள் தேர்தல் நடைபெற்றது. 25 ஆம் நாள் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. 198 வார்டுகளுக்கு நடைபெற்ற தேர்தலில் 16 தமிழர்கள் வெற்றி பெற்றுள்ளனர். கடந்த முறை மாநகராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 24. இதனோடு ஒப்பிடும்போது, இந்த முறை மாநகராட்சியில் தமிழர்களின் எண்ணிக்கை குறைவுதான். இதற்கான காரணங்களை ஆய்வு செய்யும் போது பல கருத்துக்கள் தெரிய வருகின்றன. கடந்த முறை வெற்றி பெற்ற தமிழ் உறுப்பினர்கள் பலரின் தொகுதிகள் மாற்றியமைக்கப்பட்டு, சாதி அடிப்படையிலும் மாற்றத்திற்கு உள்ளானதால் பலர் போட்டியிட முடியவில்லை. அரசியல் கட்சிகளிலும், தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள தொகுதிகளில் தமிழர்களுக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை. அரசியல் கட்சிகளில் உள்ள தமிழர்கள், தங்கள் தனிச் செல்வாக்கை வளர்த்துக் கொள்வதோடு தங்களின் பின்னால் மிகப்பெரிய ஆதரவுக் கூட்டம் இருக்கிறது என்பதையும் காட்ட வேண்டும் என்பதைத் தான் நாம் பல முறை வலியுறுத்தி வந்திருக்கிறோம். கடந்த முறை வெற்றி பெற்ற மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று திரண்டு இங்குள்ள தமிழ் அமைப்புகளோடும், தமிழ்ச் சங்கத்தோடும் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு ஒரு பெரும் மாநாட்டை நடத்துவதற்குத் துணை நின்று, ஒட்டு மொத்த தமிழர்களும் தங்கள் பின்னால் இருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தி இருந்தால், அவர்கள் கட்சிகளில் வாய்ப்பு வழங்கி இருப்பார்கள். ஒரு வேளை வாய்ப்பு கிடைக்காமல் போயிருந்தால் கட்சி சார்பு இல்லாமல் சுயேச்சையாக நின்று வெற்றி பெற்றிருக்கலாம். இந்த முறை வெற்றி பெற்ற சுயேச்சை கவுன்சிலர்கள் 8 பேரில் மூவர் தமிழர்கள். தொகுதியில் அவர்கள் நன்றாகச் செயல்பட்டு மக்களிடையே நன்கு அறிமுகமானதால் பெரிய அரசியல் கட்சி வேட்பாளர்களை வென்று சாதிக்க முடிந்தது.

எனவே இப்போது தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழ் கவுன்சிலர்கள் அனைவரும் சிறப்பாகச் செயல்பட்டு வரும் காலத்தில் தவிர்க்க முடியாத பெரிய சக்தியாகத் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். தமிழ், தமிழர் அமைப்புகள் தங்களுக்கு முழு ஆதரவாக இருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தும் வகையில் அவர்கள் செயல்பாடு அமைய வேண்டும்.

பெங்களூர் மாநகர்மன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழர்கள் திருமதி. பிரதிபாராஜன் (குவெம்புநகர்), திரு. வேலு நாயக்கர் (இலட்சுமி தேவி நகர்),

திரு. சம்பத்ராஜ் (தேவர ஜீவன ஹள்ளி), திரு. ஏழுமலை (சகாயபுரம்), திரு. குணசேகர் (ஜெயமகால்), திரு. ஆனந்தகுமார் (ஒய்சளாநகர்), திருமதி. மம்தாசரவணா (அல்சூர்), திரு. கோவிந்தராஜ் (சுபாஷ்நகர்), திரு. சிவபிரகாஷ் (ஓகலிபுரம்), திரு. பாலகிருஷ்ணன் (நீலசந்திரா), குமாரி பழனிகாந்த் (தயானந்தநகர்), திருமதி. பத்மாவதி (பிரகாஷ்நகர்), திருமதி. ரேகா கதிரேசன் (சல்வதி பாலையா), திரு. பிரதிபா தன்ராஜ் (தர்மராய டெம்பல்), திரு. இராமச்சந்திரா (ஈஜிபுரா) திரு. சிவகுமார் (வண்ணாரப்பேட்டை)

கடந்த மாநகராட்சியில் இடம் பெற்ற தமிழர்கள் எண்ணிக்கையை விட, இந்த முறை எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், வெற்றி பெற்றுள்ள தமிழர்களில் தொகுதியில் நன்கு அறிமுகமாகி செல்வாக்குப் பெற்றவர்களாகப் பலர் உள்ளனர். அவர்கள் மேலும் சிறப்பாகச் செயல்பட்டு, தங்கள் தொகுதியில் உள்ள தமிழர்கள் மற்றும் அனைவரின் நலனுக்காக வரும் ஆண்டுகளில் உழைப்பார்களேயானால் குறைந்தது ஆறு பேர் வரும் சட்ட மன்றத் தேர்தலில், அவர்கள் சார்ந்திருக்கும் கட்சியில் தேர்தலில் நிற்கும் வாய்ப்பைப் பெறலாம். அதை நோக்கமாகக் கொண்டு அவர்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டும். நீண்ட நாட்களுக்குப் பிறகு கர்நாடக சட்ட மன்றத்தில் தமிழரின் குரல் ஒலிக்க வேண்டும் என்ற ஒட்டு மொத்த தமிழர்களின் கனவை நனவாக்க அனைத்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் சிறப்பாகச் செயல்பட வேண்டும்.

இந்த முறை மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரையும் பெங்களூர்த் தமிழ்ச் சங்கம நெஞ்சம் நிறைந்து வாழ்த்துகிறது. விரைவில் அனைத்துத் தமிழ் உறுப்பினர்களுக்கும் இங்குள்ள தமிழ், தமிழர் அமைப்புகளோடு இணைந்து சிறப்பான முறையில் பாராட்டு விழா நடத்துவோம்.

## தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும்

இருபதாம் நூற்றாண்டின் ஈடுஇணையற்ற சமூக நீதிப் போராளி தந்தை பெரியார். அவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பது நமக்கெல்லாம் பெருமை. தந்தை பெரியார் மிகச் சிறந்த பகுத்தறிவுப் பகவளனாக விளங்கித் தன் இறுதி மூச்சுவரை மக்களை, மூட நம்பிக்கைகளில் இருந்தும், சமுதாய ஏற்றத் தாழ்வுகளில் இருந்தும் மீட்பதற்காகப் போராடியவர். அவருடைய 137ஆம் பிறந்தநாள் செப்டம்பர் திங்கள் 17ஆம் நாள் ஐயா. அவர்களைப் பற்றியும் அவர் கூறிய சில கருத்துக்களையும் இனி நினைவு கூர்வோம்.

ஈழத்துப் பாவலர் காசி ஆனந்தன் அவர்கள் பெரியாரைப் பற்றிக் கூறும் போது,

''பெரியார் ஒருவர்தான் பெரியார்
அவர்போல் பிறர்யார் அவர் பெருமைக்கு''
உரியர் - தந்தை பெரியார்'' என்றும்

''வானம் உள்ளவரை வையம் உள்ளவரை
யார் இங்கு மறப்பார் பெரியாரை''

என்று சிறப்புறக் கூறுகிறார்.

சீர்த்திருத்தம், கல்வி, ஆசிரியர், பெற்றோர் கடமைகள், தமிழ் மொழி, திருக்குறள் இவை குறித்த பெரியாரின் பொன்மொழிகள்.

**சீர்த்திருத்தம் :** ‘சீர்த்திருத்தம் என்பது தேவையற்றதை நீக்கிவிட்டு தேவையுள்ளதை மட்டும் வைத்துக் கொள்ளுதலே ஆகும்.’

**கல்வி :** கல்வியறிவும் சுயமரியாதையும் எண்ணமும் பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.

**ஆசிரியர் பெற்றோர் கடமைகள் :** ஆசிரியர்கள், பெற்றோர்கள், அதிகாரிகள் எல்லோரும் மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை, நாணயம் இவைகளை வளர்க்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

**தமிழ் மொழி :** ஒரு நாட்டின் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுக்குள் தலையாய பற்று மொழிப்பற்றேயாகும். மொழிப்பற்று இல்லாதவரிடத்து தேசப்பற்று இராதென்பது நிச்சயம். ஆதலால் தமிழர்களுக்குத் தாய்மொழிப் பற்றுப் பெருக வேண்டும் என்பது என் பிரார்த்தனை.

**திருக்குறள் :** குறள் வெறும் ஒழுக்கத்தையும் வாழ்க்கைக்கு வேண்டிய அனுபவபூர்வமான உண்மை வழியையும் கொண்டதாகும். குறள் ஒரு அறிவுக் களஞ்சியம். பகுத்தறிவு மணிகளால் கோக்கப்பட்ட நூல்.

**பேரறிஞர் அண்ணா :** தந்தை பெரியார் தலைமைச் சீடராக விளங்கி, தனி இயக்கம் கண்டு, தமிழ்நாட்டின் முதல் அமைச்சராக இரண்டு ஆண்டு காலம் பணியாற்றி, கோடிக்கணக்கான மக்களின் இதயங்களில் ஆழமான இடம் பெற்றவர். பேரறிஞர் அண்ணா அவர்கள், மிகச் சிறந்த பேச்சாளராகவும், மாந்தநேயம் மிக்கவராகவும், படிப்பாளியாகவும், அறிஞராகவும் விளங்கியவர்.

அண்மையில் மறைந்த முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் அப்துல்கலாம் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிக் கூறும் போது ‘1950களில் மாணவர்களின், இளைஞர்களின் இதயங்களைக் கவர்ந்த ஆற்றல்மிகு பேச்சாளராக அண்ணா அவர்கள் விளங்கினார். எல்லா இளைஞர்களைப் போலவே நாங்களும் அவருடைய பேச்சைக் கேட்கவேண்டும் என்று விரும்பிச் சென்னைக்கு வந்து அவரைச் சந்தித்து எங்கள் பள்ளிக்கு, ராமநாதபுரத்துக்கு அவர் வரவேண்டும் என வேண்டினோம். எங்கள் வற்புறுத்தலுக்காக ஒப்புக்கொண்ட அண்ணா அவர்கள் திருவையாருக்கு வரும்போது அங்கிருந்து வருவதற்கு முயல்கிறேன் என்று கூறினார். அவ்வாறே குறிப்பிட்ட நான் வருவதாகக் கடிதம் எழுதினார். மகிழ்ச்சிக்கடலில் திளைத்த நாங்கள் அவரை வரவேற்பதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்து வரவேற்றோம். அண்ணா அவர்கள் நான் என்ன தலைப்பில் பேச வேண்டும் என்று எங்களையே கேட்டார். திகைத்த நாங்கள் தயக்கத்தோடு நதிகள் என்ற தலைப்பில் பேசுங்கள் என்றோம். அடுத்த ஒன்றரை மணி நேரத்துக்கு நதிகள் பற்றி அருமையான சொற்பொழிவு - நதிகள் தோன்றியதில் இருந்து உலகில் உள்ள முகாமையான நதிகள் அவற்றின் நீளம் அவற்றால் வளம் பெறும் நிலப்பகுதிகள், நதிகள் ஒட்டி வளர்ந்த மாந்த இனம் என்று அனைவரும் வியக்கும் வகையில் பேசினார். இன்றுவரை அவருடைய பேச்சு என் நினைவில் உள்ளது. நதிகளின் இணைப்பு குறித்து இப்போது நான் கூறும் கருத்துக்கள் எல்லாம் அவரின் பேச்சில் இருந்து நான் பெற்ற உணர்வுகள்’ என்று அண்ணாவின் பெருமையை சிறப்பாகக் கூறியுள்ளார்.

இவ்வாறு அரும் பெரும் தலைவர்களாக விளங்கிய தந்தை பெரியாரையும், அண்ணாவையும் குறித்த இன்றைய தலைமுறைக்கு நாம் எடுத்துக் கூறி அவர்கள் கருத்தைப் பின்பற்றச் செய்ய வேண்டும்.